# ‘அவசரகாலச் சட்டம் செல்லுபடியாகாது!’

## தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான வழக்கில் ஜீ. ஜீ. யின் சட்டவாதம்!


சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35 | வ.ஆ. 2007 ஆனி 31 | றஜபு 15 | (14-7-76) புதன் புத்தகம் 30 | இதழ் 24


### “ஜனாதிபதி எதேச்சையாக அச்சட்டத்தை பிரகடனப்படுத்தமுடியாது”

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு எதிராக இலங்கைக் குடியரசினல் தொடரப்பட்ட வழக்கு விசாரணைககு எடுத்துக் கொள்ளப்பட்டது, தற்போது அமுலிலிருப்பதாக சொல்லப்படும் அவசர காலச்சட்டமும், அதன்


—4-ம் பக்கம் பார்க்க


# சட்டமறுப்பு இயக்கம் யூலை 31ல் ஆரம்பமாகும்!

## யூலை 23 முதல் ‘சிறையிருக்கும் இளைஞர் வாரம்’

### சிறையில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டால் தமிழ் ஈழத்தில் தீவிர இயக்கம் வெடிக்கும்!

### திருக்கோணமலை மாநாட்டுத் தீர்மானங்கள்!

● ஆண்டுக்கணக்காக நீதி விசாரணை ஏதுமின்றி சிறையிலடைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரும் “இளைஞர் விடுதலை வாரம்” யூலை 23ம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு அனுட்டிக்கப்படும்.

● இந்த ஒருவார காலத்தில் சிறைப்படுத்தப்பட்ட தமிழ்இளைஞர்களை விடுதலைசெய்யக்கோரும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் சட்டமறுப்பாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன் பகிரங்க இடங்களில் ஆயிரக்கணக்காக ஒட்டப்படும். அத்துடன் தமிழ் ஈழம் முழுவதும் கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்தி, பொது மக்களுக்கு சிறையிருக்கும் இளைஞர்களின் நிலையை எடுத்துச் சொல்வதுடன், இந்த இளைஞர்களின் குடும்ப உதவி நிதிக்கும் சட்ட உதவிக்கும் நிதி திரட்டப்படும்.

● 31-7-76 முதல் சட்டமறுப்பு இயக்கத்தின் முதல் நடவடிக்கையாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சிய முழக்கத்தை பிரதிபலிக்கும் சுவரொட்டிகள் பல்லாயிரக்கணக்கில் தமிழீழமடங்கிலும் ஒட்டப்படும்.

● இதைத்தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் பங்கு பற்றும் வகையில் சட்டமறுப்பு இயக்கம் வேறு பல பிரிவுகளாக விரிவு படுத்தி நடாத்தப்படும்.

● ஆவணி (யூலை) ஐந்தின் முன் சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு விடுதலை அல்லது நீதி விசாரணை கிடைக்காது அவர்களுடைய சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் ஈழத்தில் சகல நிர்வாகமும் ஸ்தம்பிக்கும் வகையில் தீவிர இயக்கம் நடத்தப்படும்.

● ஒவ்வொரு கட்டத்திலும் இயக்கத்திற்கான நாள்; இடம் பங்குகொள்வோர் ஆகியவற்றை போராட்டக்குழுவே தீர்மானித்து கட்டளையிடும்.

மேற்கண்ட அம்சங்கள் யூலை 9 10ம் திகதிகளில் திருக்கோணமலையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட போராட்டப் பிரகடனத்திலிடம் பெற்றிருக்கின்றன


—2-ம் பக்கம் பார்க்க


### திருச்செல்வம் கோரிக்கை

“ஒரு நாட்டின் அரசியல் அமைப்புத்திட்டத்தை அந்நாட்டின் பாராளுமன்றமே தயாரித்து சட்டமாக நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால் இலங்கையின் இன்றைய அரசியல் திட்டத்தை சிலர் ஒன்றுகூடி அரசியல் நிர்ணய சபை என்று தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டு அதனைச் சட்டமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த அரசியல் நிர்ணய சபைக்கும் ஒரு சாதாரண கிராம சபைக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை. இந்த வாதப்படி ஒரு கிராம சபைகூட ஒரு அரசியல் திட்டத்தை உருவாக்க முடியும். எனவே புதிய அரசியலமைப்புத்திட்டம் சட்டபூர்வமற்றது என்பதே எனது நிலையாகும். இதை நிரூபிப்பதற்காக இந்தப் பூர்வாங்க விசாரணையின்போது சில சாட்சியங்களை இங்கு அழைக்கவிரும்புகிறேன். ஒரு சந்தேக நபருக்கு எதிராக விசாரணை செய்யப்படும் வழக்கில், அவர் சார்பில் ஆஜராகும் சாட்சியங்களை விசாரணை செய்யாமல் வெறுமனே வழக்கை விசாரணை செய்வது நியாயமற்ற செயலாகும். ஆகவே சந்தேக நபர், உண்மையான நிகழ்ச்சிகளை யெல்லாம் இந்த நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்தி ஒரு சத்தியக் கடுதாசியை ஒப்படைப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கவேண்டும்”

—12-7-76 நீதிமன்ற விசாரணையின்போது குற்றம் சுமத்தப்பட்ட திரு. அ. அமிர்தலிங்கம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஒருவரான திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. நீதிபதிகளிடம் இவ்வாறு கோரினார்.

# “என்னுடைய வாழ்நாளில் தமிழ் ஈழம் மலரவேண்டும்

## இதுவே எனது கடைசி ஆசை!”

“எனக்கு இப்பொழுது 78 வயது ஆகிவிட்டது. நான் இன்னும் கனகாலம் இருப்பது ஐமிச்சம். ஆனல் நான் சாக முன்பு தமிழினத்துக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு சாகத்தான் எனது விருப்பம். சிங்கள மக்கள் இங்கு வாழ்வதுபோல நாமும் எங்கள் சுயநிர்ணய உரிமையோடு நிலைத்து வாழவேண்டும். அதை சொல்லத்தான் நடுங்கிய நிலையிலும் நான் வந்து நிற்கின்றேன். ஆகையால் நான் சொல்வதைக்கேட்டு தமிழ் நாட்டை உருவாக்க ஒத்துழையுங்கள்!”

இவ்வாறு திருகோணமலை மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய மூதறிஞர் தந்தை செல்வா குறிப்பிட்டார்.

(அவரது முழுப்பேச்சு அடுத்த ஞாயிறு இதழில் இடம்பெறும்.)

—செல்வா பேச்சு


தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுச்சேரா மாநாடு தமிழினத்துக்கோர் அரியவாய்ப்பு!

## வெளிநாட்டுத் தலைவர்களின் அனுதாபத்தை எமது போராட்டத்தின்பால் திருப்புவோம்!

இலங்கையிலே தமிழர்கள் இன்றுள்ள நிலையில் கொழும்பில நடுநிலை நாடுகளின் மாநாடு நடைபெறுவது தமிழர்களுக்கு ஒரு கிடைத்தற்கு அரிய சந்தர்ப்பமாகும். அந்தச் சந்தர்ப்பம் எமக்குகிடைத்துள்ளது. அதை உரியமுறையில் பயன்படுத்துவது தமிழ் மக்களின் கடமையாகும். தமிழ் தலைவர்களின் முக்கிய கடமையாகும்.

இன்றைய நிலையில் வெளிநாட்டு மக்களும் தலைவர்களும் எமது நிலையை அறிய வேண்டும் என நாம் எல்லோரும் விரும்புகிறோம். அவர்களே எமது நாட்டுக்கு வரும்போது அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த தவறினால் எமது வாழ்க்கையில் பெரிய தவறு செய்தவர்களாவோம். எனவே அதற்கேற்ற ஆயத்தங்களை தமிழ் தலைவர்கள் மேற்கொள்வது அவர்களின் தலையாய கடமையாகும்.

சிறிமா அம்மையார் தமது மேதாவிலாசத்தை இந்த மாநாட்டில் காட்டவேண்டும் என்ற எண்ணத்தில் காரியமாற்றுகிறார். தமது புகழ் உலகுயர உயரவேண்டும் என்று விரும்புகிறார். இலங்கையை உலக நாடுகளில் பிரசித்திபெற்ற நாடுகளில் ஒன்ருக இருக்க செய்யமுயற்சிக்கிறார். இந்த நிலையில் எமது பலத்தை நாம் காட்டுவோமாயின் கதையே எதிர்மாருக திரும்பிவிடும். வியட்நாமுக்கும் பாலஸ்தீனத்துக்கும் ரொடீசிய, தென் ஆபிரிக்க கறுப்பின மக்களுக்கும் தொண்டைகிழிய அலறும் சிறிமா உலக தலைவர்களுக்கு முன்பு தலைகுனியவேண்டிய நிலை தோன்றும். தமிழ் நாட்டில் தி.மு.க. அரசாங்கத்தை பதவியில் நின்றும் நீக்கிவிட்ட காரணத்தால் தமிழர்களின் கிளர்ச்சி அடங்கிவிடும் என்று நினைக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆடைகள் சர்வதேச அரங்கில் களைந்தெறியப்படும். இந்திரா அம்மையாருக்கும் எமது விடுதலை உணர்ச்சியை நேரே கண்டு கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இவைகளுக்கெல்லாம் அந்த மாநாடு நடக்கும் சமயம் எமது போராட்டம் மிக உக்கிரமமாக நடைபெறுவது அவசியம்,

வடக்கு கிழக்குமாகாணங்களில் நடைபெறும் இந்த கிளர்ச்சிகளால் சில வேளைகளில் பயன் இல்லாதுபோய் விடலாம். கண்டிப்பான தணிக்கை முறைகள், அரசாங்க கெடுபிடிகளால் கொழும்புக்கு செய்திகள் எட்டுவது பிரச்சினைக்குரிய தொன்ருகலாம். எனவே சில போராட்டங்களை கொழும்பில் நடத்துவது சாலசசிறந்தது. அரசாங்க காவல்துறையின் திரைகள் கிழிக்கபட்டு எமது செய்திகள் எமது விருந்தினர்களின் காதுகளில் எட்டவேண்டும். அந்த போராட்டம் அகிம்சை முறையிலோ அல்லது கிளர்ச்சி முறையிலேயோ அமையலாம். ஆனல் எமது நோக்கம் நிறைவேறல்வேண்டும். இங்கு வந்தவர்கள் எமது பிரச்சினைகளைப் பற்றியே கதைக்கவேண்டும்; எமது பிரச்சினைகளைப்பற்றி அறிய அவர்களாகவே எம்மை அணுகும் நிலைதான்ற வேண்டும். அவர்கள் இலங்கையில் கால் எடுத்துவைக்கும்போது இங்கு தமிழ் உணர்ச்சி கரைபுரண்டு ஓட வேண்டும்.

1948 தொட்டு இன்றுவரை தமிழனின் இரத்தத்தை குடித்து மகிழும் சிங்கள ஆட்சயை பழிவாங்கும் தருணம் வந்துவிட்டது! எமது அன்புக்குரிய தமிழ் தலைவர்களே உங்களது சக்தியை காட்டுங்கள்! 1961-க்குப் பின்னர் 1970 வரை பேசினீர்கள் நடந்தது ஒன்றுமில்லை. அதன்பின்பு செயலில் இறங்கினீர்கள் உங்களை கண்டு அரசு நடுங்குகிறது! எனவே வாய்ப்பேச்சிலும் பார்க்க செயலேகூடிய சக்தி வாய்ந்ததென்பதை நாம் கண்கூடாக கண்டுள்ளோம். எம்மிடையேயுள்ள சக்தியினை வென்று திரட்டி பயன் உள்ளவகையில் பிரயோகித்து கூடிய விளைவுகளை அதாவது பிரயோசனங்களை பெற்றுக்கொள்ளவேண்டும். ஓரளவுக்குப் பரவியுள்ள எமது செல்வாக்கு மிகக் கூடுதலாக பரவவேண்டும். ஆயிரக்கணக்கில். தொண்டர்களும் தலைவர்களும் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். யானைக்கு ஒரு காலம் என்றால் பூனைக்கொரு காலம் என்ற பழமொழி உண்மையாதல் வேண்டும். சிங்கள ஏகாதிபத்தியத்தின் கண்ணில் விரலைவிட்டு ஆட்ட வேண்டும். இங்குவரும் வெளிநாட்டு தலைவாகள் (பிரதமர்கள், அமைச்சர்கள், ராஜதந்திரிகள்) எல்லோரையும் தனித்தனியே சந்தித்துஎமது பிரச்சினையை விளக்க படித்த அறிவாளிகளை நியமிதது செயல்படுத்த வேண்டும். வெளிநாட்டில் இருந்து வரும் 700 பத்திரிகையாளர்கட்கு எமது நிலை தெட்ட தெளிவாய் காதில் போடப்படவேண்டும். அவர்கள் தாயகம் திரும்பியதும் எமது இனத்தின் அவலநிலையை தம் பத்திரிகைகளில் எழுதும் நிலை தோன்றவேண்டும். நாம் அவர்களை அணுகும்முறை மிகுந்த சகிப்புதன்மையுடன் கூடியதாய் இருத்தல் அவசியம். ஏனெனில நல்லதுசெய்யப்போய் இனத்துக்குதீமை செய்ததாய் முடிந்துவிடல் ஆகாது. வெளிநாட்டு விருந்தினருக்கு தமிழ் இனத்தின் சார்பில் விருந்தொன்றினை நடத்தினல் மிக மிக நன்று?

நான் மேலே எழுதியவை சாதாரண உணர்ச்சியுள்ள ஒரு தமிழன் இன்று மனதில் கொண்டுள்ள ஆசைகளாம். இவைகளை நிறைவேற்ற தேவையான தமிழ் தலைவர்களின் சலியாத உழைப்பு புத்தியுடன் இட்டம் தீட்டும் ஆற்றல் இவர்

— 3-ம் பக்கம் பார்க்க.

# சட்டமறுப்பு இயக்கம் யூலை 31ல்...

1-ம் பக்கத் தொடர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபையினால் ஆலோசிக்கப்பட்டு போராட்டக் குழுவினால் தயாரிக்கப்பட்டு, வெள்ளம் போல் கூடியிருந்த பல்லாயிரக்கான தமிழ் மக்களிடையே தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபரான நாவலர் அ. அமிர்தலிங்கத்தினால் முன் வைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட திருகோணமலைத் தீர்மான வாசகம் வருமாறு:-

"ஈழம்வாழ் தமிழ் மக்கள் ஓர் தனித்தேசிய இனமென்று பிரகடனம் செய்தும், இத்தமிழ் தேசிய இனத்தின் தாயகமான தமிழ் ஈழத்தை சிங்கள ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து மீள்வித்துப் புனரமைப்பு செய்து சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழினத்தின் "தந்திரத்தை நிலைநாட்டத் தீர்மானித்தும், அதற்கான ஓர் போராட்டத்திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்குமாறு நடவடிக்கைக் குழுவுக்குப் பணித்தும் 1976ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதி திருகோணமலையில் கூடிய த்மிழர் விடுதலைக்கூட்டணியின் சிறப்பு மாநாடு கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கிறது:—

## இளைஞர் வாரம்

1972ம் ஆண்டுமுதல் காலத்திற்கு காலம் கைது செய்யப்பட்ட தமிழ இளைஞர் பல வருடங்களாக எவ்வித நீதி விசாரணையுமின்றி வெஞ்சிறையில் வாடி வதங்கிக்கொண்டிருப்பதாலும்—

அவர்கள் நீதி விசாரணை அல்லது விடுதலைகோரி ஆவணி மாதம் 5ந் திகதி முதல் சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாலும்—

—தமிழினத்தின் விடுதலைப்போரின் முதல் அங்கமாக இனத்தின் சுதந்திரத்தை நாடிய ஒரே குற்றத்துக்காக ஆட்சியாளரால் சிறைப்படுத்தப்பட்ட இளைஞர்களை விடுதலைசெய்யக் கோரும் சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் சட்டமறுப்பாக விநியோகித்தும் தமிழ் ஈழம் முழுவதும் கூட்டங்களை நடாத்தியும் சிறையிருக்கும் இளைஞர்களின் குடும்ப உதவிக்கும் சட்ட உதவிக்குப் நிதி திரட்டுவதற்கும் ஜூலை 23ம் திகதி முதல் சிறையிருக்கும் இளைஞர் வாரமாக அனுட்டிக்க இம் மாநாடு தீர்மானிக்கிறது.

## நிர்வாகம் ஸ்தம்பி மாகும்

சட்டமறுப்பு இயக்கத்தின் முதல் நடவடிக்கையாக யூலை 31ம் திகதி தமிழீழமெங்கும் தனிநாடு கோரும் சுவரொட்டிகளை ஒட்டுவதென்றும் அதைத்தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றும் வகையில் சட்டமறுப்பு இயக்கத்தை வேறு பல பிரிவுகளிலும் விரிவுபடுத்தி நடத்துவதென்றும் ஆவணி ஐந்தின் முன் சிறையிருக்கும் இளைஞர்களுக்கு விடுதலை அல்லது நீதி விசாரணை இடைக்காது அவர்களினுடைய உண்ணுவிரதப் போராட்டம் ஆரம்பிக்கும் பட்சத்தில் தமிழ் ஈழத்தில் சகல துறைகளும் ஸ்தம்பிக்கும் வகையில் தீவிரமான இயக்கத்தை நடத்துவதென்றும் ஒவ்வொரு கட்டத்திலும இயக்கத்திற்கான தான் இடம் பங்குகொள்வோர் ஆகியவற்றை தீர்மானித்து கட்டளை இடவும் தாம் கைது செய்யப்படின் தம் இடத்திற்கு இயக்கத்தை நடத்தக்கூடியவர்களை நியமிக்கவும் பூரண அதிகாரத்தை ஒன்பதின்மர் கொண்ட போராட்டக் குழுவுக்கு இம்மாநாடு அளிக்கிறது.

## இலண்டன் தமிழருக்கு பாராட்டு

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப்போருக்கு உலக நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறும் பொருட்டும் அவசரகாலச் சட்டத்தாலும் செய்தி தணிக்கையாலும் இருட்டடிப்பு செய்யப்படும் இயக்கச் செய்திகளை வெளியுலகத்திற்கு அறிவிப்பதற்கும் பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களைக்கொண்ட அமைப்புக்களை ஆங்காங்கு ஏற்படுத்துவதென்று மாநாடு தீர்மானிக்கும் அதே நேரத்தில் இத்துறையில் முன்னேடிகளாக அருந்தொண்டாற்றிவரும் லண்டன் வாழ் தமிழர்களுக்கு மாநாடு தன் பாராட்டை தெரிவிக்கிறது.

சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டதன் பலனுக நீதி விசாரணைக்கு ஆளாகும் தொண்டர்கள் திட்டமிட்டு மீறிய சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டால் எதிர் வழக்காடுவதில்லை என்பதை பொதுக்கொள்கையாக தீர்மானிக்கும் அதே நேரத்தில் திட்டமிடப்படாத பாரதூரமான குற்றங்கள் சாட்டப்பட்டாலோ எதிர்வழக்காடுவதன் மூலம் நாட்டு மக்கள் முன்னும், உலக நாடுகளின் முன்னும் தமிழினத்தின் பிரச்சினைகளைக்கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருந்தாலோ அதற்கேற்ற வகையில் எதிர்த்து வழக்காடுவதென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## சமுதாய புனரமைப்பு

இனத்தின் விடுதலைக்கு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், தமிழினத்தின் ஒருமைப்பாட்டையும் பொருளாதார மலர்ச்சியையும் ஏற்படுத்தும் பொருட்டு.

(1) சாதியொழிப்பு

(2) நில மற்ருேருக்கு நிலம் பெற்றுக்கொடுத்தல்

(3) மலையகத்தோட்டங்களில் வேலைவாய்ப்புக்களையும் வாழ்க்கை வசதிகளையும் இழந்துவரும் தமிழ்தொழிலாளர் தமிழ் ஈழத்தில் குடியமர நிலமும் ஏனைய வசதிகளும் பெற்றுக்கொடுத்தல்.

(4) தென்னிலங்கையில் வாழும் தமிழரை தமிழ் ஈழத்தில் தம் வாழ்வை அமைக்குமாறு தூண்டுதல்.

(5) அதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

ஆகிய சமூக புனரமைப்புக்குத்தேவையான திட்டங்களை தயாரிக்கவும் அவற்றை செயற்படுத்துவதற்குமான கட்டளைகளை இயக்கத்தினருக்கு இடுவதற்கும் பூரண அதிகாரமுள்ள பதினெருபேர் கொண்ட குழுவை இம் மாநாடு நியமிக்கின்றது.

போராட்டக் குழுவும் சமூகப் புனரமைப்புக் குழுவும் இடும் கட்டளைகளை ஏற்று சட்டமறுப்பு இயக்கத்தில் ஆயிரமாயிரமாக ஈடுபட்டுச் சிறை செல்லவும், சமூக புனரமைப்பு இயக்கத்திலீடுபட்டு தீண்டாமை முதலிய சமுதாய மாசுகளைத் துடைப்பதற்கும் தத்தம் ஆற்றலுக்கு ஏற்ப தொண்டாற்ற முன்வருமாறும் இயக்கத்தின் இவ்விரு துறைகளிலும் ஈடுபட முடியாதோரும் வாரத்தில் ஒரு நேர உணவை விலக்கி இனத்துக்கு அதை அர்ப்பணிக்கிறேம் என்ற உள்ள உணர்ச்சியோடு விடுதலைபோருக்கு அப்பொருளை வழங்குமாறும் சிந்தையாலும், சொல்லாலும் செயலாலும் சுதந்திர சோசலிச தமிழீழம் காணும்வரை இடையீடின்றி தம் பங்கைச் செய்யுமாறும் இச் சிறப்புமாநாடு தமிழ் தேசிய இனத்தின் ஒவ்வொருவருக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனில் நம்பிக்கைவைத்து தமிழர் நடத்தும் அறப்போரே தமிழீழ விடுதலைப்போர்!

''மனிதனது உரிமைகள் அத்தனையும் அவனுக்கு இறைவன் கொடுத்த உரிமைகள் இவைகளைப் பறிக்க எவருக்கும் அதிகாரம் இல்லை. இறைவனுக்கேகூட அந்த அதிகாரம் இல்லை என்றால், நிச்சயமாக ஆள்வோருக்கும் அந்த அதிகாரம் இல்லை. இவை பறிபோகும்போது ஏனென்று எதிர்க்க எவருக்கும் உரிமை உண்டு. அந்த கட்டத்தில் தான் இன்று ஈழம்வாழ் தமிழர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் ஒன்றுகூடி இருக்கின்றோம்—எங்களுக்கு பண பலம் படை பலம் இல்லை ஆனால் தூய உள்ளம் உண்டு. சுதந்திரமாக வாழ்வோம் என்ற துணிவு உண்டு. அபயம் அளிக்கும் ஆண்டவன் அருகில் நிற்கின்றான் என்ற நம்பிக்கை உண்டு—ஆண்டவனில் நம்பிக்கை கொண்டுதான் அறப்போரில் குதித்துள்ளோம்—எனவே இது தூய்மையான போர். இறைவனில் ஊற்றெடுத்து தமிழ் பேசும் இனத்த வரை ஊடுருவிப் பாய்ந்து தனிநாட்டை, இன்பத் தமிழ் நாட்டை ஆக்கித்தந்து, ஆங்கு உரிமையுடன் வாழ்வோம் என்னும் உண்மையை உலகறிய எடுத்துக்கூறும் உன்னத போர் இது.''

# அமரர் சிவப்பிரகாசம்



மே 22ல் தமிழ்த் தலைவர்கள் கைதுசெய்யப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற திரு. க. சிவப்பிரகாசம் அவர்கள் அச்செய்தி கேள்வியுற்றதுமே அதிர்ச்சியடைந்து மூர்ச்சையானார். அன்றிலிருந்து சுயநினைவு திரும்பாமலே 25-5-76ல் அவர் அமரரானார்.

இவர் தமிழரசுக்கட்சியின் ஆரம்பகாலத் தொண்டராவர், முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் 1956 திருமலை யாத்திரைக்கு அமைப்பாளராக விளங்கினார். அமரர் திரு. கு. வன்னியசிங்கம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், திருமலை ஜோதி இராஜவரோதயம் அவர்களோடு அதிக ஈடுபாடு கொண்டவர். தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்களது அரசியலை மட்டுமல்ல, அவரது நேர்மையையும், சத்தியத்தையும், ஆணையையும் மறவாது காத்து வளர்த்துப் போற்றி வந்தவர் எனலாம். தமிழர்கள் பிரச்சினை தீர்க்கப்படுவதற்குத் தனி நபர் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமெனவும், உண்ணாவிரதம் காக்க வேண்டுமெனவும் தலைவர்களைக் கோரி வந்தார். இளைய தலைமுறையினரைவிட வயதானவர்கள் தான் போராட்ட ஆரம்பத்தில் கலந்துகொள்ள வேண்டுமென விரும்பினார்.

முல்லைத்தீவுத் தேர்தல் தொகுதிக்கு ''அடங்காப் பற்று'' எனப் பெயரிட வேண்டுமென வவுனியா, பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களிடமும் வற்புறுத்தியவரும் இவரே; நிறைந்த அரசியல் வாதியாக விளங்கிய இவர் தமிழரசுக் கட்சியின் உரிமைத் தொண்டனாகவும் இருந்தார்.

அரசியல் மட்டுமல்ல சிறந்த சைவ பக்தராக இருந்து அளம்பில் திருமுருகபுரம் ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயஸ்தாபகராகஉழைத்து சிறந்த தேவாலயத்தை அமைத்தார். சமூகத் தொண்டுகள் பல புரிந்தார்; கூட்டுறவுச் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்து முல்லைத்தீவுப் பகுதியின் சிறந்த கூட்டுறவுத் தலைவராக வாழ்ந்தார் முல்லைத்தீவுச் சைவ வித்தியாசாலையை ஆரம்பித்து நடத்த உழைத்தவரும் இவரே! இன்று இவ்வித்தியாசாலை சிறப்பாக நடைபெறுகிறது.

வட்டுக்கோட்டையில் அண்மையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் பொதுச்சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். அன்னாரின் ஈமக்கிரியையில் வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்புவும் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்களும் கலந்துகொண்டனர். அன்னாரின் மறைவு தமிழர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

—முத்துசுப்ரமணியம்

## ஒற்றுமையை கட்டிக்காப்போம்

### குணரத்தினம்பேச்சு

''தமிழினம் விடுதலைக்காகப்போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மொழிவழி பிரிந்த எமது சங்கங்களை எதிர்நோக்கி அளப்பரிய பணிகள் காத்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் எம்மிடையே தோன்றியுள்ள ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சதிவலைகளும் நடைபெற்றுக்கொண்டிருப்பதை மனதிற்கொண்டு விழிப்புடன் செயலாற்றி நாம் அடையவேண்டிய இலட்சியத்தை விரைவில் அடையவேண்டும். எம்மிடையே உள்ள வேறுபாடுகளை, குறிப்பாக பிரதேச வேறுபாடுகளை தூரத்தே தூக்கி வீசி விட்டு எமது போராட்டத்தில் முழுமூச்சுடன் செயற்படுவோம்''

என்று 2-7-76ல் மட்டக்களப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத்தின் 12வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய சங்கத் தலைவர் வே. குணரத்தினம் கூறினார்.

புதுவருட அலுவலர்களாகப் பின் வருவோர் தெரிவாகினர். தலைவர்: திரு. வே. குணரத்தினம் துணைத் தலைவர்கள்; திரு. சி. கந்தையா, திரு; ச. இரத்தின சபாபதி. பொதுச்செயலாளர்: திரு. சி. இலிங்கவேலாயுதம் துணைச்செயலாளர்; திரு. பெ. விக்னேஸ்வரன் பொருளாளர்: கு ஜோ. கிருபைராசா துணைப்பொருளாளர்: திரு. த. கணேசரத்தினம் எண்மர் கொண்ட செயற்குழுவும் தெரிவாகியது.

## கொழும்பில் மறைமலையடிகள் நூற்றாண்டு விழா!

மறைமலை அடிகளார் நூற்றாண்டு நிறைவு விழாவினை ஈழத்தமிழ எழுத்தாளர் பேரவையும், இலங்கை மத்திய வங்கித் தமிழ் இலக்கிய மன்றமும் இணைந்து பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. இவ் விழா எதிர்வரும் யூலாம் 17 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இவ்விழாவிற்கு ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவைத் தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமை தாங்குவார். பேரவையின் இணைச் செயலாளரில் ஒருவரான திரு. கோவை மகேசன் வரவேற்புரை நிகழ்த்துவார், இவ்விழாவில் ஈழவேந்தன் எழுதிய ''தமிழக மறுமலர்ச்சியின் தந்தை மறைமலை அடிகள்'' என்னும் நூல்வெளியிடப்படும். அத்துடன் மறைமலை அடிகள் எழுதிய நூல்களும், அவரைப்பற்றி எழுந்த வெளியீடுகளும் நூற்காட்சியாக வைக்கப்படும். மேலும் அவர் கருத்துகள் உள்ளடக்கிய தமிழியக்க கடிதவுரைகளும் கூட்டத்தில் விற்பனையாகும்.

கூட்டத்தில் சிறப்பு சொற்பொழிவாளர்களாக பேராசிரியர் சு. வித்தியானந்தன், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், திரு. செ. இராசதுரை, அருட்திரு செல்வரெத்தினம் அடிகள் திரு. கா. பொ. இரத்தினம் மற்றும் பல பேரறிஞர்கள் கலந்துகொள்வார்கள். விழாவில் ''மறைமலை அடிகள் பிறந்திலரேல்'' எனும் தலைப்பில் ஒரு சிறப்புப்பா அரங்கு நடைபெறும். இவ்வரங்கில் இலங்கைப் பல்கலைக்கழக கட்டுப்பெத்தை வளாக மாணவர்கள் இராஜமனோகரன் திரு. வேந்தனார் இளங்கோ ஆகியோர் கலந்து கொள்வர்.

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகத் தனிச் சிறப்புடன் குறிப்பிடத்தக்க முறையில் இவ்விழா பல்துறை சிறப்போடு அமையும்.

## மண்வெட்டும் வேலை கூட மலையகத் தமிழனுக்கு இல்லையாம்!

நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் நுவரெலியாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'போமுரெல்ல திட்டத்தில்' 76ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஜீ. சி. ஈ. வரை படித்த தமிழ் இளைஞர்கள் வேலை செய்தனர். தற்போது ''பிரசாவுரிமை'' எனும ''லைசன்ஸ்'' இல்லாத மலையகத் தமிழ் இளைஞர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு விட்டது. இதனால் பல இளைஞர்களின் தொழிலுரிமை பாதிக்கப்படும். அதே வேளையில் சிங்கள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு தாராளமாக இடங்கொடுத்திருக்கின்றது. இதனால் மலையகத்தமிழனுக்கு மண் வெட்டவும் இந்த நாட்டில் உரிமையில்லை என்பதை நன்றாக எடுத்துக்காட்டி விட்டதால் இளைஞர்கள் [illegible] வேதனையும் அடைந்துள்ளனர்.

## கூட்டுச்சேரா...

—2-ம் பக்கத் தொடர்

[illegible] மேலாக செய்து முடிப்போம் என்கின்ற ஒருவகையான வெறி தலைவர்கள் செய்வார்களா? சிங்களஏகாதிபத்தியத்திற்கு நல்ல பதில் கொடுப்பார்களா?

பொறுத்திருப்போம் ஆவணி வரை.

—வதுரன், பதுளை.

## தமிழ் ஈழத்து உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் தமிழர்விடுதலைக் கூட்டணி கைப்பற்றவேண்டும்

உள்ளூராட்சி அமைச்சர் திண்ணைவேலியிலே நடைபெற்ற விழா ஒன்றிலேதான் கொழும்பு திரும்பியதும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை உடன் நடத்த ஆவனசெய்வேனென உறுதி உறுதி கூறியிருந்தார். சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் ஸ்ரீ. ல. சு. கட்சியின் செல்வாக்கை உள்ளூராட்சிமன்ற தேர்தலினால் உயர்த்தலாமென திட்டமிட்டுள்ளார்கள். காரணம் இதுகாலவரை தமிழ் ஈழத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கூடுதலாகக் காட்டிக்கொடுப்பவர்களும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு ஊது குழலாளர்களும்தான் இருந்தார்கள். இருக்கின்றார்கள். இதனால்தான் அரசாங்கம் தமிழ்மக்கள் மேல் தப்புக்கணக்குபோட்டு, பலசாதுரியங்களை சாதிக்கின்றன. என்பது மறைக்கமுடியாத உண்மையாகும். ஆகவே இனியும் இப்படியான தவறுகளை நாம் செய்வதை பார்த்திருக்கமுடியாது.

எமது பொதுத்தேர்தலுக்கு முன் அனேகமாக உள்ளூராட்சி மன்றதேர்தல் [illegible] இருப்பதால் எமது தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டிப்பாகத் தலையிட்டு எமது இயக்கத்தை வளர்க்கக் கூடிய முற்போக்கான தலைவர்களையே தெரிவுசெய்விக்கவேண்டுமென விரும்புகின்றோம். சில சமயங்களில் பரவலாக தமிழர் விடுதலை முன்னணியின் தலைமையை ஏற்காமல் அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளைக் கலைக்கலாம். ஆனால் அது தமிழ் ஈழமெங்கும் பரவலாக இருக்கவேண்டும் அப்போதான் பிரச்சினையும், விழிப்புணர்ச்சியும், விடுதலைவேட்கையும் கூடுதலாக உண்டாக சந்தர்ப்பமாகவும் அமையுமெனவும் நம்புகின்றோம்.

இதுகாலவரை உள்ளூராட்சி மன்றங்களிலே தலைவர்களாக இருந்தவர்கள் காட்டிகொடுத்த சரித்திரத்தை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். எமது திட்டப்படி நாம் தலையிடுவோமாயின் நிச்சயமாக காட்டிக்கொடுக்கின்றவர்கள் அடியோடு மறைவார்கள் என்பதில் நம்பிக்கையுண்டு. ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு கூட்டணி நிர்வாகத்தை அமைத்து அவர்கள் மூலமாக தெரிவுசெய்யப்பட்டவர்களே உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலே அபேட்சகராக நிற்பாட்டவேண்டும். பிரச்சினைகள் எழலாம் அவையாவையும் சமாதானமாக முடியடித்து கூட்டணியின் கட்டுப்பாட்டிலுள்ள தலைமையையே தெரிவு செய்யவேண்டுமென மனதார விரும்புகின்றோம்.

—துன்னையூர் கமலேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் 14—7—76

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

## உண்ணாவிரத அறிவிப்புக் கடிதம் பிரதமரிடம் சமர்ப்பிக்கும்படி

# சிறைச்சாலை அதிகாரியிடம் கையளிப்பு!

## பாடசாலைகளை தொடர்ந்து பகிஷ்கரிக்க மாணவ மாணவியர் ஆலோசனை!

ஆகஸ்ட் 5ம் திகதிக்கு முன்னர் தாம் விடுதலைசெய்யப்படாவிடின் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்படாவிடின், ஆகஸ்ட் ஐந்தாம் திகதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பது என்ற தமது முடிவை பிரதமருக்கு அறிவிக்கும்கடிதமொன்றை 12-7-76ல் வெலிக்கடை சிறைச்சாலை சுப்ரின்டெண்டனிடம் தடுப்புக்காவலிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் கையளித்திருப்பதாகத் தெரியவருகிறது. தமது கடிதத்தை பிரதமரிடம் அனுப்பி வைக்குமாறும் அவர்கள் சிறைச்சாலை அதிபரிடம் கோரியுள்ளனர்.

தாம் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்வது என்ற முடிவுக்கு வந்த காரணத்தை இக்கடிதத்தில் பிரதமருக்கு தமிழ் இளைஞர்கள் விளக்கியிருப்பதாக தெரிகிறது.

இதே சமயம் சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருப்பது என்று முடிவுசெய்திருக்கும் செய்தி தமிழ் இளைஞர் மத்தியிலே காட்டுத்தீபோல பரவி வருகிறது. சிறைகளில் நம் உடன்பிறப்புக்கள் உண்ணாவிரதமிருந்து இறந்துபோக நாம் விடுவதா? என்று அவர்கள் குமுறுகிறார்கள். அதனால் அரசுக்கு தமது எதிர்ப்பை முன் கூட்டியே தெரிவிப்பது பற்றி அவர்கள் ஆலோசித்து வருகிறார்கள்—இந்த எதிர்ப்பியக்கத்தின் முன்னோடியாக பாடசாலைகளை முன் கூட்டியே தொடர்ந்து பகிஷ்கரிப்பதன் மூலம், சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவிக்க பாடசாலை மாணவ மாணவியர் ஆலோசித்து வருகின்றனர்.

## அவசரகாலச்சட்டம்....

—1-ம் பக்கத் தொடர்

கீழ் நிறுவப்பட்ட இந்த நீதிமன்றமும் செல்லுபடியாகாதவை; அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானவை என்று திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும், முன்னாள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகமும் வாதிட்டனர். அரசியல் அமைப்புத்திட்டத்திற்கு முரணாக நியமிக்கப்பட்டிருக்கும் இந்த நீதிமன்றம் சட்டவிரோதமானது என்று திரு. புள்ளநாயகம் அங்கு வாதித்தார்.

தமிழ்த் தலைவர்களுக்கு எதிராக சிறீலங்கா குடியரசு தொடர்ந்துள்ள வழக்கு 12-7-76 திங்கட்கிழமை காலை 9-00மணிக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஜே. எப். ஏ. சொய்சா, சிவா செல்லையா ஆனந்த ஜி. டி. சில்வா ஆகியோரைக்கொண்ட குழுவின் முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. திரு.அமிர்தலிங்கம், வேட்டியும் நாஷனலும் அணிந்து தமிழ்த்தேசிய உடையுடன் புன்னகை பூத்த முகத்தின் ராகக்காணப்பட்டார்.

திரு. அமிர்தலிங்கத்தின் சார்பில் திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி. மு. திருச்செல்வம் கியூ. சி. சட்டத்தரணி திரு. புள்ளநாயகம், நீலன் திருச்செல்வம், கனக—ஈஸ்வரன், இ. கதிரவேற்பிள்ளை, மு. சிவசிதம்பரம், கந்தசாமி ஆகியோருட்பட ஏராளமான சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

கோர்ட் முதலியார் முதலில் திரு.அமிர்தலிங்கத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை ஒவ்வொன்றாக தமிழில் படித்து முடித்துவிட்டு, குற்றவாளியா சுற்றவாளியா என்பதை தெரிவிக்கும்படி திரு. அமிர்தலிங்கம் இதந்த விளக்கமளித்து மறுமொழி கூற எழுந்த சமயம், அரசாங்கத் தரப்பில் ஆஜரான சட்டமா அதிபதி திரு. சிவாபசுபதி, இந்த நீதிமன்றத்தில் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்ற கேள்விக்கு மட்டுமே பதிலளிக்கமுடியுமென்றும் வேறு விளக்கமளிக்க இடமில்லையென்றும் வாதாடினார்.

இதைத்தொடர்ந்து திரு. ஜீ. ஜீ. எழுந்தார். அவர் பேசுகையில, இந்த நீதிமன்றத்தை அவமதிக்கக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே கடந்த முறை குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றப்பத்திரிகையை பெற்றுக்கொண்டதாகவும், தான் சென்ற தடவை கூறியது போன்று சட்டப்பிரச்சினைகள் சிலவற்றை கிளப்பவிருப்பதாகவும் தெரிவித்தார். தாம் கிளப்பவிருக்கும் சட்டப் பிரச்சினைகள் அலசப்பட்டு, தீர்வு காணப்படுவதற்கு முன்னர், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளி அல்லது சுற்றவாளி என்று கூறமுடியாதென்றார் திரு. பொன்னம்பலம்.

அவசரகாலச்சட்டமும், அதன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளும் செல்லுபடியாகுமா? என்பது முதலாவது பிரச்சினையென்றும், அடுத்து, அரசியலமைப்புச் சட்டம் செல்லுபடியாகுமா என்பது இரண்டாவது பிரச்சினையென்றும், அவசரகால சட்டம் செல்லுபடியாகுமா என்ற கேள்வியையே தாம் எழுப்பவிருப்பதாகவும் அரசியலமைப்புச்சட்டம் செல்லுபடியாகாதென திரு. திருச்செல்வம் வாதிப்பார் என்றும் திரு. பொன்னம்பலம் எடுத்துரைத்தார்.

அப்போது குறுக்கிட்ட சட்டமா அதிபதி, அரசியலமைப்புச் சட்டம் செல்லுபடியாகுமா இல்லையா என்பது பற்றி விவாதிப்பதற்கும் தீர்ப்பளிப்பதற்கும் இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லையென்றார். இதற்குப்பதிலளித்த ஜீ. ஜீ. அவசரகாலச் சட்டம் மீதான தனது ஆட்சேபனை விவா அரசியலமைப்பு சட்டம் பற்றிய ஆட்சேபனை கிளப்பப்படும்போது, அதுபற்றி சட்டமா அதிபதி தனது கருத்தைத்தெரிவிக்கலாமென்றும், தமது முதலாவது வாதம் அவசரகாலச்சட்டம் பற்றியதாகவேயிருக்குமென்றும் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து குற்றவாளியா சுற்றவாளியா என்ற கேள்விக்கு திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு பதிலளித்தார். செல்லுபடியாகாத அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த நியாயாதிக்கம் இல்லாத நீதிமன்றத்தில் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்ற கேள்விக்குப்பதிலளிப்பது தம்மால் முடியாத காரியம் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

கோர்ட் முதலியார், திரு. அமிர்தலிங்கம் தமிழில் கூறியதை தவறாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தபோது, திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு, ஆங்கிலத்தில் தாம் கூறியதை எடுத்துரைத்தார்.

இதைத்தொடர்ந்து திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமது வாதத்தை ஆரம்பித்தார். மூன்றரை மணி நேரம் அவர் நிகழ்த்திய தமது சட்ட வாதத்தில் அவசரகாலச்சட்டம் செல்லுபடியாகாது என்பதை அழகுற எடுத்து விளக்கினார்

1972ம் ஆண்டு மே 22ம் திகதி புதிய குடியரசு அரசியல் சட்டம் வந்த பின்னர், அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் ஜனாதிபதியினால் இதுவரை அவசரகாலச்சட்டம் ஒருபோதுமே பிரகடனப்படுத்தப்படவில்லையென்றும், அப்படி பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால், அதற்கான வர்த்தமானியையோ வேறு அதிகார பூர்வமான ஆவணத்தையோ முன்வைக்க முடியுமா என்றும் அரசாங்கத் தரப்பினரை திரு. பொன்னம்பலம் கேட்டார்.

அவசரகால விதிகளின் கீழ் ஒழிந்துகொண்டு புதிய அரசியல் சட்டத்தை [illegible] அரசியல் சட்டத்தின் பிரகாரம், அவசரகாலச் சட்டத்தை மே 22க்குப் படவில்லை; இல்லாத அவசரகாலச் சட்டத்தின் கீழ்தான் இங்கு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1972 மே 22க்குப் பின்னர், அவசரகாலச்சட்டப் பிரகடனம் ஜனாதிபதியினால் செய்யப்படவுமில்லை; அது தேசிய அரசுப் பேரவையினால் அங்கீகரிக்கப்படவுமில்லை. சட்டபூர்வமற்ற அவசரகால விதிகளின் கீழ்தான் இந்த நீதிமன்றங்கூட நிறுவப்பட்டிருக்கிறது. நான் வருத்தத்தோடு கூறுகிறேன்—அவசரகாலச்சட்டம் செல்லுபடியாகாது என்பதை நீதிபதிகள் ஏற்றுக்கொள்வார்களேயானால் அதே செல்லுபடியாகாத சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட இதற்கு நீதிமன்றம் என்று பெயர் இடவும் முடியாது.

செல்லுபடியாகாத இந்த அவசரகால சட்டத்தினகீழ் தான் ஏராளமானோர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மதிப்புக்குரிய நீதிபதிகள், அவசரகாலச்சட்டம் செல்லாது என்ற முடிவுக்கு வருவார்களானால், அதே சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட எத்தனையோ காரியங்களும் முறையற்றதாகிவிடும்.

இவ்வாறு ஜீ.ஜீ. பேசினார்.

### புள்ளைநாயகம் வாதம்

முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் திரு. புள்ளைநாயகம் அடுத்துப்பேசுகையில் கூறியதாவது:-

"இங்கிலாந்து மகாராணிக்குள்ள அதிகாரம் இங்குள்ள ஜனாதிபதிக்கு கிடையாது; அங்கு யுத்தப் பிரகடனம் செய்யும் அதிகாரம் கூட மகாராணியிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. நியூசிலாந்து சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் ஜனாதிபதிக்கு பூரண இறைமை உண்டு. இங்குள்ள அரசியல் சட்டப்படி, பிரதமரின் ஆலோசனையின் பேரில்தான ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தமுடியும். அரசியலமைப்பிலுள்ள மற்ற சட்டங்கள் அனைத்தும் அமுலிலுள்ள சட்டமாக கருதப்பட்ட போதிலும், பொது ஜனபாதுகாப்புச் சட்டம் மட்டும் அரசியல் அமைப்பு சட்டத்தின் 134ம் பிரிவு உபபிரிவு இரண்டுக்கு அமைய செயற்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட (134) இரண்டாவது பிரிவின்படி பிரதமரின் ஆலோசனைப்படிதான் ஜனாதிபதி அவசரகாலப் பிரகடனத்தை பிரகடனப்படுத்தமுடியும் அதைவிடுத்து, 1947ம் ஆண்டிலிருந்து அமுலிலிருந்துவரும் பொது ஜன பாதுகாப்புச் சட்டத்தின் இரணடாவது பிரிவுக்கமைய மகாதேசாதிபதி தனது இஷ்டப்படி அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தமுடியாது.

அரசியல் சட்டத்தின் 134 (2) பிரிவை அனுசரித்தே (பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே) பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின் 2வது பிரிவை பிரகடனப்படுத்தமுடியும். அரசியல் சட்டத்தின் இந்த விதிக்கமைய இப்போது அமுலிலிருப்பதாக சொல்லப்படும் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படவில்லை.

எனவே அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச்சட்டமும், அதன்கீழ் நிறுவப்பட்டுள்ள இந்த நீதிமன்றமும், குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கும் செல்லுபடியாகாது என்பதே எனது வாதம்."

இவ்வாறு புள்ளைநாயகம் கூறினார். (மேலும் வழக்கு விபரங்கள் அடுத்த ஞாயிறு இதழில் இடம்பெறும்)

எண்ணெய் முழுக்குக்கு,
ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள்
தலையிலும் உடம்பிலுமுள்ள அழுக்கை
நீக்கி நறுமணம் கமளச் செய்கிறது,
ஒரு பைக்கற் -/25 சதம் மட்டுமே
மில்க் வைற் சவர்க்காரத்
தொழிலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூலை மாதம் 14-ந் திகதி புதன்கிழமை அச்